# கோவில்பட்டி நகராட்சி

## சாதாரணக் கூட்டம்

**நிகழும் விகாரி வருடம் பங்குனி திங்கள் 18 நாள். 31–03–2020ம் தேதி செவ்வாய் கிழமை காலை 11.00 மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் வைத்து சாதாரண கூட்டம் நடைபெறும்.**

**முன்னிலை :–திரு.ஒ.ராஜாராம்,பி.காம்.,**

கோவில்பட்டி நகராட்சி — தனிஅலுவலர்

நாள்: 30–03–2020 — கோவில்பட்டி நகராட்சி

<table>
<tr><th>மன்ற கூட்ட தேதி</th><th>வரிசை எண் மற்றும் மன்றப்பொருள்</th><th>மன்றத் தீர்மானம்</th></tr>
<tr><td>31–03–2020</td><td>

<u>பொருள் எண்: 1</u>

கோவில்பட்டி நகராட்சி புதிய குடிநீர் குழாய் இணைப்புக்கான நிர்வாகக் கட்டணம் மற்றும் மேற்பார்வைக் கட்டணம் ஒவ்வொரு ஆண்டும் பொதுப்பணித்துறையினரின் தரவிலை விகித அட்டவணையின்படி கட்டணம் நிர்ணயம் செய்யப்பட வேண்டும். அதன்படி 2020–2021 ஆம் ஆண்டின் விலை விகித அட்டவணையின்படி புதிதாக வழங்கப்பட்டு வரும் குடிநீர் குழாய் இணைப்புக்கான சாலை சீரமைப்புக் கட்டணம் மற்றும் மேற்பார்வை கட்டணம் ஆண்டு தோறும் 5% கட்டணம் உயர்த்தி வசூல் செய்யுமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி நடப்பாண்டுக் கட்டணம் கீழ்கண்டவாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

<table>
<tr><th rowspan="2">வ. எண்.</th><th rowspan="2">சாலையின் தன்மை</th><th colspan="2">30 மீட்டர்</th><th colspan="2">90 மீட்டர்</th></tr>
<tr><th>மேற்பார்வைக் கட்டணம்</th><th>சாலை சீரமைப்பு கட்டணம்</th><th>மேற் பார்வைக் கட்டணம்</th><th>சாலை சீரமைப்பு கட்டணம்</th></tr>
<tr><td>1.</td><td>கருங்கல்சாலை</td><td>547<br>(447+100)</td><td>1567</td><td>1405<br>(1305+100)</td><td>5153</td></tr>
<tr><td>2</td><td>தார்சாலை</td><td>1114<br>(1014+100)</td><td>3972</td><td>3094<br>(2994+100)</td><td>11889</td></tr>
<tr><td>3.</td><td>சிமெண்ட்சாலை</td><td>1170<br>(1070+100)</td><td>4190</td><td>3259<br>(3159+100)</td><td>12570</td></tr>
</table>

மேற்கண்டவாறு நிர்ணயம் செய்த கட்டணம் வசூலிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:- மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண்.4025 அலுவலகக் குறிப்பு: அங்கீகரிக்கப்பட்டது

</td><td>தீர்மானம் எண்.4025 அலுவலக குறிப்பு: அங்கீகரிக் கப்பட்டது</td></tr>
<tr><td></td><td>

<u>பொருள் எண்: 2</u>

இந்நகராட்சி பராமரிப்பிலுள்ள சிதம்பராபுரம் உரக்கிடங்கில் தேக்கி வைக்கப்பட்டுள்ள முன்புறமாக உள்ள குப்பைகளை பொக்லின், JCB மற்றும் டிப்பர் லாரி பயன்படுத்தி அகற்றி பின்புறமாக சேமிப்பதற்கு உத்தேச மதிப்பீட்டுச் செலவினம் ரூ.10.00/–இலட்சத்திற்கு மன்றத்தின் அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:- மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 1755/2020/இ1

</td><td>தீர்மானம் எண்.4026 அலுவலக குறிப்பு: அங்கீகரிக் கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<u>பொருள் எண்: 3</u><br>
இந்நகராட்சி பராமரிப்பிலுள்ள காந்திநகர் உயர்நிலைப்பள்ளியில் உள்ள பழைய மரப்பொருட்களை 11.03.2020 அன்று ஏலமிடப்பட்டதில் 2 ஏலதாரர்கள் கலந்து கொண்டு கீழ்க்கண்டவாறு அதிகபட்ச ஏலக் கேள்வித் தொகை கேட்டுள்ளனர்.
<table>
<tr><td>வ. எண்.</td><td>ஏலதாரர் பெயர்</td><td>ஏலதாரர் அதிகபட்சமாக கேட்டத் தொகை</td></tr>
<tr><td>1.</td><td>திரு.P. விஜயகுமார்</td><td>5,300/–</td></tr>
<tr><td>2.</td><td>திரு.P. மாரிமுத்துப்பாண்டியன்</td><td>5,000/–</td></tr>
</table>
மேற்கண்ட விவரப்படி திரு.P. விஜயகுமார் என்பவர் அதிகபட்சமாக ரூ.5,300/– ஏலக்கேள்வித் தொகை கேட்டுள்ளார். எனவே, அதிகபட்ச ஏலக்கேள்வி கேட்டுள்ள திரு.P.விஜயகுமார் அவர்களின் ஏலத்தொகையை ஏற்க மன்றத்தின் அங்கீகாரம் வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலக குறிப்பு</u>:-<br>
1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2) ஆணையாளர்/தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>
ந.க.எண். 428/2020/இ1
</td>
<td>தீர்மானம் எண்.4027<br>அலுவலக குறிப்பு: அங்கீகரிக் கப்பட்டது</td>
</tr>
<tr>
<td></td>
<td>
<u>பொருள் எண்: 4</u><br>
கோவில்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள தெருவிளக்குகளை பராமரிப்பு பணி செய்து வரும் ஸ்ரீ கங்கா எலக்ட்ரிக்கல்ஸ், திருநெல்வேலி என்ற நிறுவனத்தின் பராமரிப்பு நீட்டிப்பு பணிக்காலம் 31.03.2020ம் தேதியுடன் முடிவடைவதால் தெருவிளக்கு பராமரிப்பு அவசர அவசியம் கருதி தற்போது பராமரிப்பு பணி மேற்கொள்ளும் ஸ்ரீ கங்கா எலக்ட்ரிக்கல்ஸ், திருநெல்வேலி என்ற நிறுவனத்தின் 13.03.2020ம் தேதிய கடிதத்தில் கோரியுள்ளவாறு பராமரிப்பு பணி காலத்தை அதேவிலை விகிதத்தில் மேலும், 01.04.2020 முதல் 30.06.2020 வரை நீட்டிப்பு செய்து கொள்ள மன்றத்தின் அங்கீகாரம் வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலக குறிப்பு</u>:- மன்றம் அனுமதிக்கலாம்.<br>
ந.க.எண். 8732/2014/இ1
</td>
<td>தீர்மானம் எண்.4028<br>அலுவலக குறிப்பு: அங்கீகரிக் கப்பட்டது</td>
</tr>
<tr>
<td></td>
<td>
<u>பொருள் எண்: 5</u><br>
இந்நகராட்சி பராமரிப்பிலுள்ள குடிநீர் விநியோக லாரி TN 69 Z 5369 ற்கான பழுதுகள் சரிபார்க்கும் பணிக்கு 16.03.2020 அன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டதில்,<br>
1. KSK Motors, Kovilpatti .. 49,475/- குறைவு<br>
2. Kumar Auto Works .. 59,120/- அதிகம்<br>
வரப்பெற்றுள்ள 2 விலைப்புள்ளிகளில் ரூ.49,475/– குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள KSK Motors, Kovilpatti நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அங்கீகாரம் வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலக குறிப்பு</u>:-<br>
1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. ஆணையாளர்/தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>
ந.க.எண். 1253/2020/இ1
</td>
<td>தீர்மானம் எண்.4029<br>அலுவலக குறிப்பு: அங்கீகரிக் கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td><u>பொருள் எண் : 6</u><br>இந்நகராட்சிக்குத் தேவையான எழுதுபொருட்கள், கணினி டோனர்கள் மற்றும் இதர பொருட்களை சிதம்பரனார் ஒப்பந்த தொழிலாளர் சேவை தொழிற் கூட்டுறவு சங்கம், தூத்துக்குடி நிறுவனத்தின் 16.08.2019 அன்று கொடுத்துள்ள குறைந்த விலைப்புள்ளியை நகர்மன்ற தீர்மான எண்.3721 நாள் 30.08.2019—ல் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி நிறுவனத்தில் அலுவலக தேவைக்காகவும், எதிர்வரும் உள்ளாட்சி தேர்தல் பணியின் அத்தியாவசிய தேவைக்காகவும் இனி விலைப்புள்ளி கோரி அதனால் ஏற்படும் காலதாமதத்தையும், கூடுதல் செலவினத்தை தவிர்க்கும் விதமாகவும் 12A கணினி டோனர் 100 எண்ணம் சிதம்பரனார் ஒப்பந்த தொழிலாளர் தொழில் கூட்டுறவு சேவை சங்கம், தூத்துக்குடி நிறுவனம் மூலம் பழைய விலைப்புள்ளி அடிப்படையிலேயே வாங்கிய வகையில் பட்டியல் எண்.32 நாள்: 13.3.2020—ன்படி பட்டியல் தொகை ரூ.8,01,220/— யை மேற்படி கூட்டுறவு நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u>:- மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 4576/2019/பி2</td>
<td>தீர்மானம் எண்.4030<br>அலுவலக குறிப்பு:<br>அங்கீகரிக் கப்பட்டது</td>
</tr>
<tr>
<td></td>
<td><u>பொருள் எண் : 7</u><br>கட்டிட மற்றும் இடிபாடு கழிவு மேலாண்மை விதிகள் 2016—ன்படி தூசி தடுப்பு நடவடிக்கைகள் குறித்தான அறிவிக்கையினை பொது மக்கள் நன்றாக தெரிந்து கொள்ளும் வகையில் விளம்பரம் செய்திட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களது 10.01.2020—ம் தேதிய ந.க.எண்.16850/P3/2019 கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி, மேற்படி அறிவிக்கையினை, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் மாவட்ட ஆட்சியரகம், தூத்துக்குடி அலுவலகம் மூலம் தமிழ் பத்திரிக்கையில் பிரசுரம் செய்திடும் வகைக்கு ஆகும் செலவினத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u>:- மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 4892/2019/எப்1)</td>
<td>தீர்மானம் எண்.4031<br>அலுவலக குறிப்பு:<br>அங்கீகரிக் கப்பட்டது</td>
</tr>
<tr>
<td></td>
<td><u>பொருள் எண் : 8</u><br>இந்நகராட்சிக்குட்பட்ட சிதம்பராபுரம் உரக்கிடங்கில் தேக்கி வைக்கப்பட்டுள்ள முன்புறமாக உள்ள குப்பைகளை பொக்லின், JCB மற்றும் டிப்பர் லாரி பயன்படுத்தி அகற்றி பின்புறமாக சேமிக்கும் பணிக்கு ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள இந்நகர்மன்ற தனி அலுவலர் அவர்களால் அனுமதி வழஙகப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி பணிக்கு 24.03.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம்.
<table>
<tr><td>1) திரு.V. கிருஷ்ணமூர்த்தி</td><td>..</td><td>மதிப்பீட்டை விட (—) 0.00 % குறைவு</td></tr>
<tr><td>2) திரு.V. சத்யசீலன்</td><td>..</td><td>மதிப்பீட்டை விட (+) 1.79 % அதிகம்</td></tr>
</table>
வரப்பெற்றுள்ள 2 ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட (—) 0.00% குறைவாக வழஙகியுள்ள ஒப்பந்தக்காரர் திரு.V.கிருஷ்ணமூர்த்தி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u>:- மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 1755/2020/இ1</td>
<td>தீர்மானம் எண்.4032<br>அலுவலக குறிப்பு:<br>அங்கீகரிக் கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | **<u>பொருள் எண் : 9</u>**<br>இந்நகராட்சி பொறியியல் பிரிவு பராமரிப்பிலுள்ள பவர் டில்லர் வாகன எண்.TAC 1007ற்கான இன்சூரன்ஸ் ஆகும் செலவினத் தொகை ரூ.11,057/—க்கு United India Insurance Company Limited என்ற நிறுவனத்திற்கு வழங்கிட மன்றத்தின் அங்கீகாரம் வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**:- மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 2008/2020/இ1 | தீர்மானம் எண்.4033 அலுவலக குறிப்பு: அங்கீகரிக் கப்பட்டது |
| | **<u>பொருள் எண் : 10</u>**<br>இந்நகராட்சி பொறியியல் பிரிவு பராமரிப்பிலுள்ள வாகன எண்.TN69Z5369ற்கான இன்சூரன்ஸ் ஆகும் செலவினத் தொகை ரூ.41,641/—க்கு United India Insurance Company Limited என்ற நிறுவனத்திற்கு வழங்கிட மன்றத்தின் அங்கீகாரம் வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**:- மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 2009/2020/இ1 | தீர்மானம் எண்.4034 அலுவலக குறிப்பு: அங்கீகரிக் கப்பட்டது |
| | **<u>பொருள் எண் : 11</u>**<br>தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் உத்தரவு ந.க.எண்.ஊநி8/3666/2015 நாள்: 31.12.2019 மற்றும் துணை இயக்குநர், சுகாதாரப் பணிகள் கோவில்பட்டி அவர்களின் கடித ந.க.எண்.792/அ3/2019 நாள்: 01.10.2019 இந்நகராட்சி பகுதிகளில் டெங்கு தடுப்பு நடவடிக்கை பணிகளை தீவிரமாக மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தியுள்ளதின் பேரில் டெங்கு தடுப்பு பணி அவசர அவசியம் கருதி 100 தற்காலிக களப்பணியாளர்கள் இந்நகராட்சி நிர்வாகத்தின் மூலம் நேரடியாக 01.01.2020 முதல் 31.03.2020 வரை நீடிக்கப்பட்டு 3 மாத காலம் முடிவடைவதால் மீண்டும் டெங்கு மற்றும் வைரஸ் காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை பணியின் அவசர அவசியம் கருதி நேரடியாக, 01.04.2020 முதல் 30.06.2020 வரை டெங்கு பணிக்காக தற்காலிக களப்பணியாளர்களை மேலும் 3 மாதத்திற்கு நியமிக்கவும், இதற்கான ஊதியத்தினை ECS முறையில் மாதந்தோறும் வழங்குவதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**:-<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று 100 பணியாளர்களை டெங்கு பணிக்காக தற்காலிகமாக நியமிக்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 4468/2015/எச்1 | தீர்மானம் எண்.4035 அலுவலக குறிப்பு: அங்கீகரிக் கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | <u>**பொருள் எண் : 12**</u><br>இந்நகராட்சி பகுதிகளில் மழைக்காலங்களில் ஏற்படும் தொற்று நோய்களை கட்டுப்படுத்தும் பணிக்காகவும், பேருந்து நிலைய பகுதிகளில் அமைந்துள்ள கழிப்பறை வளாகங்களை சுகாதாரமாக பராமரித்திடவும், 36 வார்டுகளிலும் அமைந்துள்ள சமுதாய கழிப்பறை வளாகங்களை சுகாதாரமாக பராமரித்திடவும், பொதுமக்கள் அதிகமாக கூடும் பேருந்து நிலையங்கள், தினசரி நகராட்சி காய்கறி சந்தைப்பகுதிகள், தெற்கு பஜார், கோவில் வளாகங்கள் மற்றும் அரசு நிகழ்ச்சிகள் நடைபெறும் இடங்கள் உள்ளிட்ட பகுதிகளை சுகாதாரமாக பராமரித்துக்கொள்ளும் பணிக்காகவும், கொரோனா (Covid-19) வைரஸ் தடுப்பு நடவடிக்கை பணிக்காகவும், கிருமிநாசினி சுண்ணாம்பு பவுடர் 2020–2021ம் ஆண்டு பயன்பாட்டிற்காக 40 டன் தேவைப்படுகிறது. இதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.7.00 இலட்சத்திற்கும் உள்ளூர் விலைப்புள்ளி பெற்று தேவைக்கேற்ப அவ்வப்போது கொள்முதல் செய்வதற்கும் மன்ற அனுமதிக்காக வேண்டப்படுகிறது.<br><u>**அலுவலக குறிப்பு**</u>:- மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 1879/2020/எச்1 | தீர்மானம் எண்.4036<br>அலுவலக குறிப்பு:<br>அங்கீகரிக் கப்பட்டது |
| | <u>**பொருள் எண்: 13**</u><br>கோவில்பட்டி நகராட்சி எல்லைக்கு உட்பட்ட கோவில்பட்டி வட்டம் மற்றும் நகரம் டவுண் சர்வே வார்டு “ சி “ பிளாக் எண்.25, நகரளவை எண்.7ல் 1100 ச.மீ பரப்பளவு கொண்ட நிலத்தில் கிராம நத்தம் 986 ச.மீ. நிலத்தை ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்டுவதற்கு நிலமாற்றம் செய்வது தொடர்பாக முன்மொழிவுடன் அனுப்பப்பட்டதில் உள்ளாட்சி அமைப்பின் தீர்மான நகல் அனுப்பிட தெரிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்து நகராட்சி தீர்மானம் நிறைவேற்றி அதன் நகலினை அனுப்பி வைத்திட கேட்டுக்கொண்டு வரப்பெற்றுள்ள வட்டாட்சியர் கோவில்பட்டி அவர்களது ந.க.எண். அ1/7710/2013, 18.02.2020 ம் தேதிய கடிதம் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br><u>**அலுவலக குறிப்பு**</u>:-<br>கோவில்பட்டி நகரம் டவுண் சர்வே வார்டு–‘சி’ பிளாக் எண்.25, நகரளவை எண்.7–ல் சர்க்கார் புறம்போக்கு கிராம நத்தம் என்று நகரளவை ஆவணங்களில் பதிவாகி உள்ளதாகவும் மற்றும் 1100 ச.மீ. பரப்பளவு இடத்தில் 986ச.மீ. பரப்பளவு நிலத்தினை ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்டுவதற்கு உரிய நகரளவு வரைபடம் மற்றும் பதிவேடு நகல் நகரசார் ஆய்வாளரால் தயார் செய்து சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் நகரசார் ஆய்வர் குறிப்பின் படியும் மற்றும் நகரளவை ஆவணங்களின்படியும் மேற்படி நிலம் வருவாய் துறைக்கு பாத்தியப்பட்டதாக உள்ளதால் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்டுவதற்கு வருவாய் துறையினர் முடிவு செய்து கொள்ள இசைவு அளிக்கலாம்.<br>(ந.க.எண். 1313/2020/எப்1) | தீர்மானம் எண்.4037<br>அலுவலக குறிப்பு:<br>அங்கீகரிக் கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | **<u>பொருள் எண்: 14</u>**<br>இந்நகராட்சியில் 2019–2020 ஆம் ஆண்டு கணக்குகள் தயார் செய்து முடிப்பதற்கான கட்டண தொகை ரூ.50,000/–ஐ (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) வழங்க கோரி ஆலோசகர் திரு.வி. சீனிவாசன் என்பவர் விண்ணப்பித்துள்ளார். மேற்படி விண்ணப்பத்தின்படி ஆலோசகர் திரு.வி.சீனிவாசன் என்பவருக்கு ரூ.50,000/–ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**:- மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 5902/2019/சி1 | தீர்மானம் எண்.4038 அலுவலக குறிப்பு: அங்கீகரிக் கப்பட்டது |
| | **<u>பொருள் எண்: 15</u>**<br>கோவில்பட்டி நகராட்சியில் திரு.ஜெ.ரத்தினராஜா, M.A.B.L.,வழக்கறிஞர் என்பவர் நகராட்சி வழக்கறிஞராக பணிபுரிவதற்கு விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளார். கோவில்பட்டி நகராட்சிக்கு எதிராக கோவில்பட்டி மற்றும் தூத்துக்குடி சார்பு நீதிமன்றம் மற்றும் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மூலம் தொடரப்படும் அனைத்து வழக்குகளிலும் இந்நகராட்சி சார்பாக திரு.ஜெ.ரத்தினராஜா, M.A.B.L.,வழக்கறிஞர் அவர்களை ஆஜராகி நகராட்சி சார்பாக வழக்குகளை நடத்துவதற்கு ஏதுவாக நகராட்சி வழக்கறிஞராக நியமனம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**: – மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>ந.க.எண்.1162/2017/சி1 | தீர்மானம் எண்.4039 அலுவலக குறிப்பு: அங்கீகரிக் கப்பட்டது |
| | **<u>பொருள் எண்: 16</u>**<br>இந்நகராட்சி பராமரிப்பிலுள்ள இராமசாமிதாஸ் பூஙகாவில் மேற்கு பக்க சுற்றுச்சுவர் பழுதடைந்துள்ளதால் அதனை அகற்றிவிட்டு புதிய சுற்றுச்சுவர் அமைப்பதற்கும், இந்நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகரமைப்பு பிரிவில் அலுமினியம் தடுப்புகளை பிரித்து மாற்றி அமைப்பதற்கும், நடராஜபுரத்தில் உள்ள அங்கன்வாடி தேர்தல் மையத்தில் மரதடுப்புகள் அமைப்பதற்கும் உத்தேச மதிப்பீட்டுச் செலவினம் ரூ.2.20இலட்சத்திற்கு மன்றத்தின் அங்கீகாரம் வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**: – மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 2027/2020/இ1 | தீர்மானம் எண்.4040 அலுவலக குறிப்பு: அங்கீகரிக் கப்பட்டது |
| | **<u>பொருள் எண்: 17</u>**<br>இந்நகராட்சிக்கு சொந்தமான பார்க் கிழக்குதெரு பகுதியில் உள்ள இடத்தில் ரூ.5,00,00,000/– மதிப்பீட்டில் புதிய அலுவலக கட்டிடம் அமைக்கும் பணிக்கு 21.07.2016 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு M/S.Nandhini Construction Erode நிறுவனம் குறைந்த சதவீதம் கொடுக்கப்பட்டு பணிகள் எடுக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டது. M/S. Nandhini Construction நிறுவனம் (EMD) முன்வைப்புத் தொகை கோரி நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தது. மேற்படி, தொடரப்பட்ட வழக்கில் நகராட்சி சார்பாக வழக்கறிஞர் ஆஜராகி வாதிடினார். தற்பொழுது, மேற்படி வழக்கு முடிவுற்று நகராட்சி சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இந்த வழக்கில் நகராட்சி சார்பில் வாதாடிய திரு.P.பாப்புராஜ், வழக்கறிஞர் அவர்களுக்கு வாதாடியதற்கான தொகை ரூ.6,000/–யை வழக்கறிஞர் அவர்களுக்கு வழங்குவதற்கு மன்றத்தின் அங்கீகாரம் வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**: – மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 3442/2014/இ1 | தீர்மானம் எண்.4041 அலுவலக குறிப்பு: அங்கீகரிக் கப்பட்டது |